**செ.வெ.எண்: 78** **நாள்: 27.08.2016**

## புதுக்கோட்டை மாவட்டத்தில் கோமாரி நோய்க்கு 11-வது சுற்று தடுப்பூசி போடுவது குறித்த விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கோமாரி நோய்க்கு 11-வது சுற்று தடுப்பூசி போடுவது குறித்து பிறதுறை அலுவலர்களுடனான விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 26.08.2016 அன்று நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:-

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் வைரஸ் நச்சுக்கிருமியால் ஏற்படுகிறது. இந்நோய்க்கு சிகிச்சை கிடையாது. தடுப்பூசி மட்டுமே இதற்கு ஒரே மருந்தாகும். இந்நோய் ஆடு, மாடு மற்றும் பன்றிகளை தாக்குகிறது. இதனால் கால்நடைகளுக்கு வாயிலும், நாக்கிலும் கொப்புளங்கள் ஏற்பட்டு எச்சில் கம்பி போன்று வழிந்துகொண்டிருக்கும். காலின் குளம்பு பகுதியில் புண்கள் ஏற்பட்டு, கால் முழுவதும் வீக்கம் காணப்படும். இதனால் பாதிக்கப்பட்ட கறவைமாடுகளின் பால் உற்பத்தி குறைதல் மற்றும் சினை பிடிப்பது தாமதம் ஏற்படும். இளைப்பு ஏற்படுவதால் எருதுகளின் வேலைத்திறன் குறைகிறது. இளங்கன்றுகளுக்கு இந்நோய் தாக்கும்பொழுது இறப்பு நேரிடும். ஆகையால் இந்நோய் வராமல் தடுக்க முறையாக கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியமாகும்.

கோமாரி நோயை தடுக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நமது மாவட்டத்தில் கோமாரி நோயை கட்டுப்படுத்த தற்பொழுது 11-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசியானது கால்நடை பராமரிப்புத்துறை குழுவினரால் மாவட்டம் முழுவதும் கோமாரி நோயை தடுக்கும் வகையில் வருகின்ற 01.09.2016 முதல் 21.09.2016 வரை 21 நாட்களுக்கு காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையும் மற்றும் மதியம் 3.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த முகாமில் கால்நடைகளுக்கு கோமாரி நோயை தடுப்பூசி இலவசமாக போடப்படும்.

இத்தடுப்பூசி பணிக்கான உத்தேச செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் விபரங்கள் அனைத்து ஊராட்சி மன்றத்தலைவர்களுக்கும் தெரிவிக்கப்படும். உத்தேச செயல்திட்டத்தில் தடுப்பூசி அளிக்கப்படும் இடம் கிராமம் வாரியாக நேரம் மற்றும் நாள் ஆகிய விபரங்களுடன் தெரிவிக்கப்படும். இதன் விபரங்கள் அனைத்து பொதுமக்களை சென்றடையும் வகையில் அனைத்து ஊராட்சி மன்றத்தலைவர்கள் தங்கள் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு கிராம சபா, ஒலிப்பெருக்கி விளம்பரம் மற்றும் விளம்பர நோட்டீஸ் வாயிலாக கோமாரி நோய் மற்றும் அதன் விளைவுகள் பற்றியும் தடுப்பூசியின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும். இத்தடுப்பூசி போடும் பணி நடைபெறும் நாளில் தங்கள் பகுதிக்கு வரும் தடுப்பூசி குழுவினருக்கு ஊராட்சி மன்றத்தலைவர்கள், வருவாய் துறையினர், புதுவாழ்வுத் திட்டம் மற்றும் மகளிர் திட்ட அலுவலர்கள் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். கோமாரி நோய் ஒழிப்பு முகாம் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நடந்தால் மட்டுமே 100 சதவீதம் கோமாரி நோயினை முற்றிலுமாக ஒழிக்க முடியும். எனவே, நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் தங்களது கால்நடைகளை தங்கள் ஊரில் நடைபெறும் தடுப்பூசி முகாமிற்கு கொண்டு சென்று தடுப்பூசியினை முறையாக போட்டு கோமாரி நோயை தடுக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு. சதாசிவம், துணை இயக்குநர் (மாவட்ட கால்நடை பெருக்கம் மற்றும் தீவண அபிவிருத்தி) மரு.மோகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. மனோகரன், உதவி இயக்குநர்கள் மரு.தேவதாஸ், மரு.ராம்குமார், மரு.செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**